FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040855

1. District : மாவட்டம் PS: காவல்நிலையம் Year: ஆண்டு 2025 FIR No.: முத.அ. எண் 4/2025 Date: நாள் 12.12.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Amended Act 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 08.12.2025/ Date from : நாள் முதல் Date to : நாள் வரை 11.12.2025/ மாலை 11.00 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2025 Time : நேரம் 10.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், அருணாச்சலேஸ்வரர் மாடவீதி 25 மீ.தெ, 21 மீ.கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible]

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண்.13, பன்னீர் செல்வம் தெரு, [illegible] அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் மாடவீதி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

[illegible] 21ஆம் ஆண்டு, அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், அருணாச்சலேஸ்வரர் மாடவீதி, [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

[illegible] —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2025

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண்.....

Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC

Cr.No.04/2025

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 12.12.2025–ஆம் தேதி காலை 10.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது S.வீரமணி, வயது 47/25, த/பெ.செல்லையா, எண்.13, பன்னிரெண்டாம்பட்டி, பெருங்களூர் அஞ்சல், புதுக்கோட்டை தாலுகா மற்றும் மாவட்டம் என்பவர் புதுக்கோட்டை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கம்யூட்டரில் டைப்செய்த ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர்– S.வீரமணி, வயது 47/25, த/பெ.செல்லையா, எண்.13, பன்னிரெண்டாம்பட்டி, பெருங்களூர் அஞ்சல், புதுக்கோட்டை தாலுகா மற்றும் மாவட்டம், பெறுநர்– காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, நான் பன்னிரெண்டாம்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது வீட்டுடன் சேர்ந்து சுமார் 1 3/4 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளது. எனது வீட்டின் அருகில் குடியிருந்து வரும் சந்திரன் மகன் ராஜேந்திரன் என்பவருக்கும் எங்களுக்கும் மேற்படி எனது நிலத்தில் அமைந்துள்ள வேலி தொடர்பாக நீண்ட காலமாக பிரச்சினை இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த 18.11.2025–ஆம் தேதி எனது நிலத்தில் உள்ள வேலியை ராஜேந்திரனும் அவரது மனைவி முத்துலெட்சுமியும் சேதப்படுத்தி விட்டார்கள். அதனை எனது அம்மா கலியசுந்தரமும், நானும் ஏன் சேதப்படுத்தினீர்கள் என்று கேட்டதற்கு அப்படித்தான் செய்வோம் என்று சொல்லி ஆபாசமாக பேசி, மிரட்டினார்கள். உடனே இது சம்மந்தமாக கடந்த 19.11.2025–ஆம் தேதி மாலை ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்போது காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் புகழேந்தி அவர்கள் புகாரை வாங்கி படித்து பார்த்து கொண்டிருந்த போது, அவருக்கு போன் வந்தது, அதில் பேசிவிட்டு என்னிடம் சென்னையில் உலக அளவில் நடைபெற இருக்கும் விளையாட்டு போட்டிக்கு பாதுகாப்பு பணிக்காக உடனடியாக போக வேண்டியுள்ளது என்றும், எனது புகாரை மற்றொரு காவல் உதவி ஆய்வாளர் சங்கர் விசாரிப்பார் என்றும், நாளை வந்து அவரை பாருங்கள் என்று சொன்னார். அதன்பிறகு காவல் நிலையத்திலிருந்து போய்விட்டேன். மறுநாள் 20.11.2025–ஆம் தேதி காலை சுமார் 10 மணிக்கு ஆதனக்கோட்டை காவல் நிலையத்திற்கு போனேன். அங்கு காவல் உதவி ஆய்வாளர் ரூமில் இருந்த நபரிடம் என்னை அறிமுகப்படுத்தி கொண்டு புகார் கொடுத்த விபரத்தை சொன்னேன். அவர் அங்கிருந்த போலிசிடம் கேட்டு

என்னுடைய புகாரை வாங்கி படித்து பார்த்தார். பிறகு பிரச்சினைக்குரிய இடத்தை நேரடியாக பார்க்க வர்றதாக சொல்லி என்னை அங்கு போகச்சொன்னார். அதன்பிறகு மதியம் சுமார் 1 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சங்கரும், மற்றொரு போலிசும் வந்திருப்பதாக சொன்னார்கள். நான் அப்போது பெருங்களூர் கடை வீதியிலிருந்து உடனடியாக அங்கு போய்விட்டேன். எனது நிலத்தில் உள்ள வேலியை பார்வையிட்டார்கள். அப்போது எதிர் தரப்பு வீட்டில் உள்ளவர்களை கூப்பிட்டார். அங்கு ராஜேந்திரனோ, அவர் மனைவி முத்துலெட்சுமியோ இல்லை, அவரது மகள் மட்டுமே இருந்தார். அவரிடம் உங்கள் அப்பா அம்மா எங்கே என்று கேட்டார், அதற்கு அவர்கள் இருவரும் கூலி வேலைக்கு போய்விட்டதாக சொன்னார். உடனே வீரமணி முறையாக சர்வேயர் மூலம் நிலத்தை அளந்து வேலிப்போட்டு வைச்சுருக்கிறார், அந்த வேலியை அநியாயமாக சேதப்படுத்தி இருக்கிறீர்கள், உங்கள் பட்டாவை எடுத்துக்கிட்டு, நாளை காலைல ஸ்டேசனுக்கு உங்க அப்பா, அம்மாவை வரச்சொல்லுங்கன்னு சொல்லிட்டு, என்னை இப்பவே ஸ்டேசனுக்கு வான்னு சொல்லிவிட்டு கிளம்பிட்டார். நானும் அப்பவே கிளம்பி ஸ்டேசனுக்கு போனேன். அப்போது மதியம் சுமார் 2.30 மணியிருக்கும், அப்போது ஸ்டேசனோட போர்டிகோவில்ல காவல் உதவி ஆய்வாளர் சங்கர் சார் சேரில் உட்கார்ந்தார். நான் அவரிடம் எதுக்கு சார் வரச்சொன்னீங்க என்று கேட்டேன். இவ்வளவு சொத்து வைத்திருக்க, பார்த்து ஏதாவது கவனிச்சுவிட்டு போன்னு சொன்னார். என்ன சார் பண்ணனும் என்று கேட்டேன். செலவுக்கு பணம் கொடுத்துவிட்டு போயா என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் என் கிட்ட இப்ப பணம் இல்லை சார் சாயாங்காலம் வரேன் சார் என்று சொல்லிட்டு வந்துட்டேன். அதன்பிறகு நான் போகலை. மறுநாள் 21.11.2025–ஆம் தேதி காலை சுமார் 10 மணிக்கு போலீஸ் ஸ்டேசனுக்கு நானும், எனது நண்பர்களான சொக்கம்பேட்டையைச் சேர்ந்த செல்லப்பனும், கருப்புடையான்பட்டியைச் சேர்ந்த பழனியும் கூட்டிக்கிட்டு புகார் தொடர்பா என்னாச்சுன்னு தெரிஞ்சிக்கிட்டு வரலாம்னு போனோம். ஏங்களுக்கு முன்னாடியே எதிர்தரப்பினரான ராஜேந்திரன், அவரது மனைவி முத்துலெட்சுமி, ராஜேந்திரனின் அண்ணன் ராமன், அவரது தம்பி மனைவி லெட்சுமி ஆகியோர்கள் இருந்தார்கள். நான் சங்கர் சாரை பார்த்து வணக்கம் சார் என்று சொன்னேன். ஏன்யா நீ சாயங்காலம் என்னை வந்து பார்க்கிற ஆளாயா என்று கோபமாக கேட்டார். நான் பதில் எதுவும் பேசலை, அதன்பிறகு புகார் பற்றி விசாரிக்கும் போது எதிர்தரப்புக்கு சாதகமாக பேசினார். நான் அதனால கோர்ட்டுல பார்த்துக்குறேனு அவரிடம் சொன்னேன். அதன்பிறகு அங்கிருந்த ஒரு ஏட்டம்மாவை கூப்பிட்டு என்கிட்ட எழுதி வாங்கச்சொன்னாரு, நான் அவங்க கிட்ட 6ம் வகுப்புவரை தான் படிச்சுருக்கேன், எனக்கு சரளமாக எழுத படிக்க தெரியாது, அதனால நான் கோர்ட்டுக்கு போய் தீர்வு கண்டுக்குறேன்னு அப்படின்னு எழுதுங்க என்று

சொன்னேனன். அப்படியெல்லாம் எழுதுனாங்க. நான் கையெழுத்து போட்டுவிட்டு கிளம்பிட்டேன். உடனே எனக்கிட்ட என்னமோ செலவுக்கு பணம் கொடுக்காம கிளம்பறன்னு சொன்னாரு. நான் பூரிச்சுபோயிட்டு வரேனு சொன்னேன். அப்ப உன் வண்டியை வச்சுட்டு போயிட்டு வான்னு சொன்னாரு. நான் நடந்தே கடைவீதிக்கு வந்து, ஸ்டேசனிலில் இருந்த புகாரிக்கு போன் பண்ணனி எனக்கு மரியாதை கொடுக்க விருப்பமில்லை, என் வண்டிய ஸ்டேசனிலிருந்து எடுத்துட்டு வந்திரு, சாவி வண்டியிலே இருக்கு அப்படின்னு சொன்னேன். ஒரு 10 நிமிசத்துல புகாரி என் வண்டியை எடுத்துட்டு வந்துட்டாரு. அந்த இடத்திற்கு செல்லப்பன் நடந்தே வந்துட்டாரு, நாங்க அங்கிருந்து வீட்டுக்கு போய்விட்டோம். அதன்பிறகு நிலப்பிரச்சினை சம்பந்தமாக கோர்ட்டிற்கு போகனும்னு தெரிஞ்சுவச்சிட்ட விபரம் கேட்டேன், மதுரையில அவருக்கு பழக்கமான வக்கீல் இருக்கிறார். மேற்படி நிலப்பிரச்சினை சம்பந்தமாக கொடுத்த புகார்மனு, ரசீது மற்றும் அது தொடர்பான ஆவணங்களோட ஜெராக்ஸ் காப்பி வாங்கிட்டு வா, வக்கீலை பார்ப்போம்னு சொன்னாரு, அதனால அவர் சொன்ன ஆவணங்களை எல்லாம் வாங்குவதற்காக 08.12.2025–ஆம் தேதி சுமார் இரவு 7.00 மணிக்கு ஆதனக்கோட்டை காவல் நிலையத்திற்கு போனேன், அங்கே நிறைய பேர் கூட்டமாக இருந்தாங்க, அவர்களை சங்கர் சார் விசாரித்து அனுப்பிய பிறகு, நான் கடைசியாக சுமார் 8 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சங்கர் சாரை போய்பார்த்தேன். ஏற்கனவே காவல் நிலையத்தில் இருந்த எனது நண்பர் புகாரியும் உடனிருந்தார். அப்போது சங்கர் சார் என்ன விபரம் என்று கேட்டார். எனது நிலப்பிரச்சினை சம்பந்தமாக கோர்ட்டிற்கு போகனும், அதற்கு நான் கொடுத்த புகார்மனு, ரசீது அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றின் நகல் தேவைப்படுகிறது, அதையெல்லாம் கொடுங்கனு கேட்டேன். நான் அதெல்லாம் தர்றதா இருந்த பணம் கொடுன்னு மறுபடியும் கேட்டாரு, நான் எவ்வளவு சார் என்று கேட்டேன், பத்தாயிரம் கொடுன்னு கேட்டாரு, நான் கொஞ்சம் பார்த்து சொல்லுங்க சார் என்று சொன்னேன். இவ்வளவு நிலம் வைச்சுருக்க, ரியல் எஸ்டேட் தொழில் பன்ற, காசு பணம் எல்லாம் நிறைய வச்சுருக்க, அப்புறமென்ன நான் கேட்ட ரூ.10,000/–த்தை கொடுத்துட்டு, மனு ரசீதை வாங்கிட்டு போன்னு சொன்னாரு. இந்நிலையில் கடந்த 10.11.2025–ஆம் தேதி மாலை 05.15 மணிக்கு TN POLS – G, TN POLICE என்ற எண்ணிலிருந்து நான் புகார்கொடுக்கும் போது அதில் குறிப்பிட்டிருந்த எனது செல்போன் எண்ணான 9786658222 என்ற எண்ணிற்கு N POLICE: தங்களுடைய புகார்மனு எண்.420/2025/ATHANAKOTTAI மீதான விசாரணை முடிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது ADVICED JUDICIAL REMEDY என்ற மெசெஸ் வந்தது. அதன்பிறகு கடந்த 11.12.2025–ஆம் தேதி பகல் சுமார் 11.00

மணிக்கு பெருங்களூர் கடைவீதியில் உள்ள மணி கம்ப்ளக்ஸ் அருகில் உள்ள டீ கடையில் நானும், செல்லப்பனும் டீ குடிச்சுக்கொண்டிருந்த போது அங்கு வந்த சங்கர் சார் என்னை பார்த்து ஏய்யா, நான் கேட்ட பணத்தை ரெடி பண்ணீட்டியா என்று கேட்டார், அதற்கு நான் இன்னும், பணம் ரெடி பண்ண முடியலை சார் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் கேட்ட பணத்தை நாளைக்கு கொண்டு வந்து கொடுத்துட்டு மனு ரசீதை வாங்கிட்டு போன்னு சொல்லிட்டு, அங்கிருந்து போய்விட்டார். அதன்பிறகு நாங்களும் அங்கிருந்து போயிட்டோம். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லததால் என்னிடம் புகார்மனு, ரசீது மற்றும் ஆவண நகல்களை கொடுக்க லஞ்சமாக ரூ.10,000/–ம் கேட்ட காவல் உதவி ஆய்வாளர் சங்கர் சார் மீது நடவடிக்கை எடுக்கும்படி இன்று 12.12.2025–ஆம் தேதி தங்களிடம் புகார் கொடுக்கிறேன். நான் 6வதுதான் படிச்சுருக்கிறதனால, எனக்கு கோர்வையாக எழுத வராது, அதனால இந்த விபரங்களை எல்லாம் கம்யூட்டர் சென்டரில் சொல்லி, இந்த புகார் தயார் செய்து தங்களிடம் கொடுக்கிறேன். இப்படிக்கு தங்களிடம் கொடுக்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) / S.வீரமணி, 12.12.2024.

Sir, Received the above computer typed complaint on 12.12.2025 at 10.30. The genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Pudukkottai Vigilance and Anti-Corruption Cr.No.04/2025 u/s 7 (a) of Prevention of Corruption Amendment Act-2018 at 12.00 hrs today on 12.12.2025 and took up for investigation. (Sd-) J.Jawahar, Inspector of Police, /V&AC/PK.

Original FIR along with Original Computer typed complaint of Tr.S.Veeramani, S/o Sellaiah, No.13, Pannirandampatti, Perungalur Post, Pudukkottai Taluk & District is submitted to the Hon'ble District Principal Sessions Judge for trial cases under Prevention of Corruption Act, Pudukkottai and a copy of FIR is submitted to the Director Vigilance and Anti-Corruption, Chennai.

12.12.25

(J. JAWAHAR)
Inspector of Police
V&AC, Pudukkottai